UPDF
WWW.UPDF.COM

ආයතනයේ නම : වනජීවී සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව

ලිමේන්තුවේ රජයේ ගිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන්
ාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර
පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் : வனவிலங்கு பாதுகாப்புத் துறை

ளயின் இலக்கம் 119 (4) இன்படி விதிமுறைகளில் பொது கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட
க்கு ஏற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மற்றும் கௌரவ அமைச்சர் அவர்களின்
அவதானிப்புகளினதும் சமர்ப்பிப்பு

UPDF
WWW.UPDF.COM

பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவினால் நிலையியற் கட்டளை இல. **119 (4)** கீழ் பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் மீதான அவதானிப்புக்களையும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் -----

---

பாராளுமன்றத்தின் பணிப்புரை இல. - 290
நிறுவனத்தின் பெயர் – வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

பொதுக் கணக்குக் குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் தற்போதைய நிலைவரமும்
முதலாம் பகுதி: **77.00**	
2004.05.11 ஆந் தேதியிட்ட171/2004 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் சுற்றறிக்கை இன் படி, அரசு சம்பளம் செயலாக்க கணினி மென்பொருள் தொடர்பான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டிருக்காமை	ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சம்பளச் செயலாக்க கடவுச்சொற்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அனைத்துக் கணக்காய்வு ஐய வினவல்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கத் தவறியமை.	வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் 16பிரிவுகள் மற்றும் 12 வலய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் சில சமயங்களில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்களைத் தயாரிக்கும் போது இந்த பிரிவுகள் மற்றும் வலய அலுவலகங்களில் இருந்து தகவல்களை அழைக்க வேண்டும். சில சமயங்களில் தகவல்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால், அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு மாதத்திற்குள் பதில்களை சமர்ப்பிக்க முடியாது. இருப்பினும், அந்த நிலைமைகளில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை இடைக்கால பதில் அனுப்பப்படுகிறது. மேலும் அந்தக் காலத்தில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக பணிக்கு அறிக்கை செய்யும் அதிகாரிகளின் கட்டுப்பாடு காரணமாக, கடந்த காலத்தில் ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்வு ஐய வினவல்களுக்கு பதில்களை சமர்ப்பிக்க முடியவில்லை. தற்போது, அனைத்து கணக்காய்வு ஐய வினவல்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்க தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.
உள்ளக கணக்காய்வு ஐய வினவல்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களைச் சமர்ப்பிக்கத் தவறியமை.	

UPDF
WWW.UPDF.COM

அனைத்து வாகனங்களிலும் அரசு சின்னம் பொறிக்கப்பட்டிருக்காமை.	வனச்சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நோக்கத்தின்படி இத்திணைக்களமானது வனவிலங்கு குற்றங்கள் தொடர்பான கைதுகள், சட்டவிரோத நடவடிக்கை சோதனைகள் மற்றும் விசாரணைகள் போன்ற கடமைகளை மேற்கொள்கிறது. எனவே, அப்பணிகளுக்கு திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களை பயன்படுத்தும் வகையில், அரச சின்னம் பொறிக்கப்படாமல் இருக்கவும், மற்ற பொது பணிகளுக்கு பயன்படுத்தும் போது ஒவ்வொரு வாகனத்திலும் திணைக்கள பெயர் பலகை காட்சிப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வாகனம் பயன்படுத்த முடியாது என ஒதுக்கப்பட்ட தினத்திலிருந்து 8 மாதங்களுக்குள் கைதவிர்க்கப்பட்டிருக்காமை	2020 ஆம் ஆண்டில், அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் அரசாங்க வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான கட்டுப்பாடு காரணமாக, அவ்வாறு இடம்பெற்று வந்த வாகன அகற்றும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இதன்படி, திருத்தப்பட்டு மீண்டும் பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் சில திருத்தப்பட்டு கடமைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. பழுதுபார்க்க முடியாத மீதமுள்ள வாகனங்கள் சிறப்புக் குழுவால் அடையாளம் காணப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்கள் வாகன மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
அரசு வாகன விபத்துகள் தொடர்பாகநி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.	திணைக்களம் இதுவரை கையாளப்படாத 95 இற்கு மேற்பட்ட வாகன விபத்துக்கள் உள்ளன. தற்போது, அந்த விபத்துகளில் 20க்கும் மேற்பட்டவை விசாரிக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள விபத்துகள் தொடர்பாக நி.பி. 103 மற்றும் 104 இன் படியான விசாரணைகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன. சுமார் 20 ஆண்டுகளிற்கு முன்ன இடம்பெற்ற சில விபத்துகள் காணப்பட்டு வருவதால், அந்த விபத்துகள் குறித்த தகவல்களை கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளது. இதன் விளைவாக, நி.பி. 104 (4) இன் படி விசாரணை தாமதமானது. எவ்வாறாயினும், தற்போது ஏற்பட்டுள்ள விபத்துக்கள் தொடர்பில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை என்பதையும், விசாரணைகள் துரித கதியில் நிறைவடைந்துள்ளதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
வங்கி கணக்கிணக்க அறிக்கைகளில் வெளிப்பட்டிருந்த சீராக்கப்பட வேண்டிய நிலுவைகள் குறித்து நிதி பிரமாணங்களின் படி ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்காமை,	வங்கி கணக்கிணக்க அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட நிலுவைகள் சீராக்கப்பட்டு, சரியாக அடையாளம் காணப்பட்ட பிறகு தீர்க்கப்பட்டுள்ளன. சரியாக அடையாளம் காண சிறிது காலம் எடுக்கும் என்பதால், ஒரு மாதத்திற்குள் சரி செய்ய முடியவில்லை.
ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படுகின்ற கடன் மீதிகள் நிலவுகின்றமை	ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படுகின்ற ரூபா 25,000 க்கும் குறைவான கடன் நிலுவைகளை கடன் நிலுவைகளில் இருந்து பதிவழிப்புச் செய்வதற்கு அனுமதி பெறுவதற்கு அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், சில கடன் நிலுவைகளும் மீட்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை

UPDF
WWW.UPDF.COM

	மீட்பதற்காக அந்தந்த பிரதேச செயலாளர்களிடம் இருந்து வாரிசுகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய தகவல்களை பெற்று சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.
பொது வைப்பு கணக்கில் உள்ள காலாவதியான வைப்புத்தொகை தொடர்பாகநி.பி. 571 இன் படி நடவடிக்கை எடுக்கத் தவறியமை.	அரசு வருவாயில் செலவு வைக்கப்பட வேண்டிய பொது வைப்பு கணக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் உள்ள வைப்புத்தொகைகள் கண்டறியப்பட்டு அரசு வருவாயில் செலவு வைக்கப்பட்டுள்ளன. நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட சில வைப்புத்தொகைகள் பணிகள் முடிவடையும் வரை வைக்கப்பட்டுள்ளது.
நி.பி. 371 இன் அடிப்படையில் பணிகள் முடிந்த ஒரு மாதத்திற்குள் செயல் நிமித்தக் கட்டுநிதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்காமை.	அதிகாரிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகள் முடிந்து ஒரு மாதத்திற்குள் அனைத்து செயல் நிமித்தக் கட்டுநிதிகளையும் தீர்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், பணிகள் முடிந்து ஒரு மாதத்துக்குள் அனைத்து செயல் நிமித்தக் கட்டுநிதிகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
நி.பி. 371 இல் பரிந்துரைக்கப்பட்ட வரம்பை மீறி செயல் நிமித்தக் கட்டுநிதிகளை வழங்குதல்	அதிகபட்சமாக ரூபா 100,000 வரை நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களிற்கு செயல் நிமித்தக் கட்டுநிதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பணியாளர்களுக்கு அதிகபட்சமாக ரூபா 20,000 வரை செயல் நிமித்தக் கட்டுநிதிகளை
இரண்டாம் பகுதி :65.00	
நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் மூலம் புகார்கள் அல்லது பாராட்டுகளைப் பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருக்காமை.	தற்போது, திணைக்களத்தின் இணையதளம் புதுப்பிக்கப்பட்டு, அதன் மூலம், பொதுமக்கள் புகார்கள் மற்றும் அவர்களின் ஆலோசனைகளை பதிவு செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆத்துடன் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு தகவல் இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவசர அழைப்புகளுக்கு 1992 என்ற அவசர அழைப்பு 24 மணி நேரமும் செயற்பாட்டில் உள்ளது.
2018 சனவரி 24 ஆந் தேதியிட்ட 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க முறையாக மனித வளத் திட்டத்தைத் தயாரிக்கத் தவறியமை.	2021 ஆம் ஆண்டுக்கான மனித வள மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டது, ஏனெனில் 2021 ஆம் ஆண்டில் சுகாதார வழிகாட்டுதல்களின்படி பணிபுரிய வேண்டியதன் காரணமாக அதிகாரிகளை குழுக்களாகச், சேகரிக்க முடியவில்லை. இருப்பினும்,பணிப்பாளர் (செயல்பாடுகள்) இன் நேரடி மேற்பார்வையின் கீழ், அனைத்து பயிற்சிகளும் செயல்பாட்டுத் திட்டத்தின்படி உதவி இயக்குனரால் (ஆராய்ச்சி மற்றும் பயிற்சி) செயல்படுத்தப்பட்டதுடன் திட்டத்தின் படி வருடாந்தி பயிற்சி திட்டங்களை செயல்படுத்த முடிந்தது. தற்போது மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டம், 50 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தது 12	2021 ஆம் ஆண்டில் அப்போது வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களின்படி, அதிகாரிகளை குழுக்களாக சேகரிப்பதில் உள்ள சிரமம் காரணமாக 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட அனைத்து பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடத்த முடியாது போயிருந்தது. இதன் காரணமாக, திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் சுமார் 50 சதவீத

UPDF
WWW.UPDF.COM

மணிநேரம் பயிற்சி வாய்ப்பை வழங்குவதற்கு உத்தரவாதம் அளித்திருக்காமை.	அளவில் பராமரிக்கப்பட்டுள்ளன. நிலைமை சீரடைந்த பின்னர், திட்டமிட்டபடி பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன
அனைத்து பதவியணியினரையும் உள்ளடக்கிய விதத்தில் செயலாற்றல் உடன்படிக்கைகளைத் தயாரித்து அவற்றில் கைச்சாத்திட்டிருக்காமை	ஒட்டுமொத்த ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஆண்டுதோறும் செயலாற்றல் அறிக்கைகள் பெறப்பட்டு, ஆட்சேர்ப்புக்குப் பிறகு பொதுப் படிவம்160 இல் அதிகாரி ஒப்பந்தம் செய்து கொள்கிறார்.
மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும்இயலாற்றல் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் எந்த ஒருசிரேஷ்ட உத்தியோகத்தரும் நிறுவனத்தில் பரிந்துரைக்கப்பட்டிருக்காமை.	ஆராய்ச்சி மற்றும் பயிற்சிபிரிவின் தலைவர் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் பயிற்சி நடவடிக்கைகளின் திட்டமிடலுக்கும் சிரேஷ்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் மறுப்பு அல்லது பாதகமான நிலையில் இருந்தமை.	2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி, திணைக்களத்தின் கணக்குகள் மறுப்பு மட்டத்திலோ அல்லது பாதகமான மட்டத்திலோ இருப்பதாகக் குறிப்பிட்டு எந்தவொரு அபிப்பிராயமும் தெரிவிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர,திணைக்களத்தின் நிதி நிலை மற்றும் அதன்நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின்படிதயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதாக ஒரு முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.
2020.08.28 ஆந் தேதியிட்ட 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 12.1 இன் படி, நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்ட வேண்டிய முக்கிய செயல்பாடுகளின் முன்னேற்றத்தை தெளிவாகக் கண்டறிந்து அளவிடக்கூடிய 03 செயலாற்றல் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்காமை.	2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாக, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அலுவலக உத்தியோகத்தர்கள் கடமைக்காக பதிவாகியிருந்ததால், அத்தியாவசிய கடமைகள் மிகவும் கடினமாக நிர்வகிக்கப்பட்டன, தற்போது, 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, செயலாற்றல் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு அதன் முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

UPDF
WWW.UPDF.COM

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை	பரிந்துரைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தாமை.	2020 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

குணதாச சமரசிங்ஹ
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ செயலாளர்
வனச்சீவராசிகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சு

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Wildlife and Forest
Resources Conservation

எம். ஜி .சி. சூரியபண்டார
கணக்கீட்டு உத்தியோகத்தர்/ பணிப்பாளர் நாயகம்
வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

M. G. C. SOORIYABANDARA
Director General
Department of Wild Life Conservation
No. 811/A, Jayanthipura Road,
Battaramulla.